உ

வேலுண்டு வினையில்லை



அன்னையிடமும் அழகனிடமும் அமைதி வேண்டும்

# பக்தி ரச முத்துக்கள்

(கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்)

## மஹோற்சவ கால வெளியீடு 1999

" அன்னைதாசன் சிறந்த பக்திமான்; தமிழோடு இசை பாடி பக்தியை வளர்க்கும் பண்புள்ளம் கொண்டவர்; பக்தி உணர்வினை பவுததிரமான இசையுடன் இணைத்து அவர் பஜனை செய்யும்பொழுது பலதடவைகள் அடியேன் பார்த்திருக்கிறேன். "

கலாநிதி எஸ். சிவலிங்கராஜா

(சற். ஆ. வெ; இல. 10)

மெய்யடியார்களே !

எமது பஜனைகளில் பல அடியார்களால் விரும்பிப் பாடும் முத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன; அன்போடு பாடி அமைதி வேண்டுவோம்.

கவிமணி க. ஆனந்தராசா (அன்னைதாசன்)

கற்பகக்கனி ஆன்மீக வெளியீடு இல. 14

உரும்பிராய்

## பாரினில் அமைதியைத் தா· தா.

கந்தா கதிர் வேலவனே - சிவ
மைந்தா எனையாள் பவனே !
எந்தாயு மெனக் கருட்தந் தையும் நீ
உன் தாயுடனே வா. வா. (3) (கந்தா கதிர்...

என் குரு நாதனே வா. வா. - இந்த
ஏழையின் குறை களைக் கேள் கேள்
உன்னையே தஞ்சமென் றேங்கியே அழுகிறேன்
என்னை நீ காத்திட வாராய். (3) கந்தா .

அழகிய மயி லினில் வாராய் எங்கள்
அழுகை யைத் தீர்த்திட வாராய்
குழு குழு பழமுதிர் சோலையின் பாலனே
இளகியே எம்முன்னே வாராய் (3) (கந்தா .

பாவிகள் படுந் துயர் பாராய் - இங்கு
மானுடம் நிலை பெற வாராய்
சூரனை ஒழித்திட்ட கூர் வடிவேலனே
பாரினில் அமைதியைத் தா. தா. (கந்தா...

## கவலைகள் தீர்ந்திட கந்தன் கழல்தொழுவீர்

வேலுடன் மயிலையும் வந்து வணங்கிட
வந்த வினைகள் எல்லாம்
கடிதென ஓடியே கவலைகள் தீர்ந்திடும்
கந்தன் கழல் தொழுவீர் — இங்கே (வேலுடன்)

தொண்டை மானாற்றங் கரையினில் உறைபவா
தொண்டர் நாங் காண துணையுடன் இங்குவா
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கண்ணீரைத் துடைத் திடப்பா — எங்கள் (வேலுடன்)

அன்னையின் மைந்தனே அழகனே வா! வா!
உன்னையே தஞ்சமென் றழுகின்றோம் வா! வா!
பன்னிரு கையனே பாடிடு மெங்களை
பரி வுடன் பார்த் திடப்பா — எம்மை (வேலுடன்)

பழமுதிர் சோலையைப் படைவீடாய் கொண்டாய்
கிழவியின் பாடலைப் பரிந்து நீகேட்டாய்
அழகியர் இருவரை அணைத்திடும் வேலனே
அமை தியைத்தந் திடப்பா -- இங்கே (வேலுடன்)

## தாவி வந்து தாங்கிடம்மா நாகபூஷணி

நயினையிலே கோவில் கொண்டாள் நாகபூஷணி
பஜனை பாட வைத்தவளெம் நாகபூஷணி
அயன் எழுத்தை மாற்றிடுவாள் நாகபூஷணி
பயம் எமக்கு ஏன் அவளின் பாதமே கதி

இந்துக்கடல் மீதினிலே கோவில் கொண்டவள்
எந்தமதம் சார்ந்தவர்க்கும் தாயைப் போன்றவள்
கந்தனுடன் கணபதியைச் சேர்த்துக் கொண்டவள்
எந்தவினை வந்திடினும் எம்மைக் காப்பவள்

இராவணனின் சாமகானம் தனை ரசிப்பவள்
நாரணனின் தங்கையிவள் நாகம் பூண்டவள்
பூரணி புராதனியிப் புவியை ஈன்றவள்
காரணியெம் கண்மணியின் கழல்கள் போற்றுவோம்

சேய்களிங்கு செந்தணலில் தெரிய வில்லையோ?
தாயைத்தேடி தவிப்பதுவும் புரிய வில்லையோ?
பாவிகளைப் பார்த்தபின்பும் பரிவு மில்லையோ?
தாவிவந்து தாங்கிடம்மா நாகபூஷணி.

## ஓடி வந்து காட்சி தந்து எம்மையிங்கு ஆதரி

ஆதி சிவன் நாயகி அம்மைபர மேஸ்வரி
ஈசனது பாதிநீ எம்மையாழுந் தேவிநீ
நாதியற்று நாங்களிங்கு பாடும்பாடல் கேட்டுநீ
ஓடிவந்து காட்சிதந்து எம்மையிங்கு ஆதரி

மகிடனாக வந்தவன் மமதைகொன்ற நாயகி
வணிகனான கோவலன் வதுவை செய்த நாயகி
அணிகலனாய் நாகமேந்தி நயினைமேவும் பூஷணி
துணிவுதந்து துயரந்தீர்க்க துர்க்கையான தாயிவள்

அபிராமி சங்கரி அகிலலோக நாயகி
உமாதேவி உத்தமி உலகையாழுந் தேவிநீ
அமாவாசை தன்னிலே அம்புலியைக் காட்டிய
இமாவானின் புத்திரி ஈடில்லாத ஜோதிநீ

கோணேஸ் வரத்திலே கொலுவானாள் மாதுமை
கேதீஸ் வரத்திலே கோதையான கௌரிநீ
வைத்தீஸ் வரத்திலே வனிதைதையல் நாயகி
நகுலேஸ் வரத்திலே நங்கைநகு லாம்பிகை.

## கச்சையோடு நின்றவன் பச்சைசாத்தி வருகிறான்

நல்லை நகர் வீதியிலே தங்கவேலன் வருகிறான்
நம்பித் தொழு மடியவரின் துயரந்தீர்க்க வருகிறான்
ஐந்து ஐந்து ஐந்து ஐந்து ஐந்து நாட்கள் திருவிழா
நைந்து நைந்து நைந்துருகும் அடியவர்க்குப் பெருவிழா

மயிலோ டன்னம்காராம் பசுமீது வருகிறான்
ஒயிலாகப் பெண்களிரு வருமருகில் வருகிறார்
வேதகீத நாதமுடன் பாதந்தொழ வருகிறான்
வாதரோக தோஷமெல்லாம் போக்கிடவே வருகிறான்

பழனிமலை மீதினிலே கச்சையோடு நின்றவன்
பச்சை மஞ்சள் பவுண்ஜொலிக்க நல்லைவீதி வருகிறான்
ஆண்டுதோறும் தன்னழகுக் கழகுசேர்த்து வருகிறான்
வேண்டுவோர்க்கு வேண்டும்வரந் தந்ததனைப்பெறுகிறான்

செல்லப்பனுக் கங்கேயொரு நல்லப்பனாய் நின்றவன்
பொல்லாப் பெல்லாம் ம்பாக்கிடவே வேலுருவில்
வருகிறான்

## தருணம் இது உன் அருளைத் தா

நல்லூரிலே நின்றாண்டிடும் வடிவேலனே முருகா
எல்லோரதும் வினைதீரவே விரைந்தோடிவா முருகா
சரவணப் பொய்கையில் உதித்தவனே
அரவணைத் தாண்டிடும் அற்புதனே
ஆரமுதே எங்கள் அழகனே வா - (2) (நல்லூரிலே -

வள்ளி மணாளனே வாருமையா
வருந் திடும் எங்களைப் பாருமையா
அள்ளி அருள் மழை தாருமையா - (2) நல்லூரிலே .

கருணைக் கடலே கதிர் வேலா
அருண கிரியின் குரு நாதா
தருணம் இது உன் அருளைத் தா - (2) நல்லூரிலே -

தேரடிச் சித்தர்கள் போற்றிய வேல்
தேவருந் தேடிடுந் திவ்ய வேல்
பேரிடர் களையிங்கு களைகின்ற வேல் - (2)

---

முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்